வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=


# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 15.04.2026 புதன்கிழமை இதழ் : 99 பக்கங்கள் : 08







## புத்தாண்டுப் பயணங்களில் பாதுகாப்பிற்கு முன்னுரிமை

### மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 15

புத்தாண்டு காலத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள் மற்றும் கவனக்குறைவாகச் செயல்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.


07



சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று மக்கள் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (அ)

# மத்திய கிழக்கு போர் தொடர்ந்தால் உலகப் பொருளாதாரம் மந்தமாகும்!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை




நியூயோர்க், ஏப்ரல். 15

**மத்திய கிழக்கில் தொடரும் மோதல்கள் காரணமாக உலகளாவிய பொருளாதார வளர்ச்சி வேகம் தடைப்பட்டுள்ளதோடு, பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தனது புதிய ஆய்வில் தெரிவித்துள்ளது.**

2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகப் பொருளாதார வளர்ச்சி 3.4 வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டமை மற்றும் எரிசக்தி நிலையங்கள் சேதமடைந்தமை காரணமாக, தற்போதைய கணிப்பின் படி இந்த வளர்ச்சி 3.1 வீதமாகக் குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசகு எண்ணெய் மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் உற்பத்திச் செலவுகள் உயர்ந்து, மக்களின் கொள்வனவு சக்தி குறைந்துள்ளது.

2026 ஆம் ஆண்டில் உலகளாவிய பணவீக்கம் 4.4 வீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. போர் நீடித்தால் இது 6 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும்.

அத்துடன், வட்டி வீத அதிகரிப்பு மற்றும் முதலீடுகள் வெளியேறுவதால்

07

## கம்பஹாவில் பிரதமர் தலைமையில் சித்திரை புத்தாண்டு கலாசார விழா



கொழும்பு, ஏப். 15

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிங்கள, தமிழ் புத்தாண்டு கலாசார விழாவின் சுபவேளையில் நிறைவேற்றப்படும் சடங்கு சம்பிரதாயங்கள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை கம்பஹாவில்

07

## பாதிக்கப்பட்ட குடும்பத்தின் புதிய இல்லத்தில் புத்தாண்டு கொண்டாடினார் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, ஏப். 15

டித்வா சூறாவளியினால் சேதமடைந்த நிலையில், அரசாங்கத்தின் இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மீள நிர்மாணிக்கப்பட்ட இல்லத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்றார்.

அநுராதபுரம் - கல்நேவ பிரதேச செயலர் பிரிவின் மல்பெலிகல கிராமத்தில் எச். எம். இந்திரஜித் சம்பத் சேனாரத்னவின்

07



## அமெ. - ஈரான் இடையே நாளை மீளவும் பேச்சுவார்த்தை?

தெஹ்ரான், ஏப். 15

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நாளை வியாழக் கிழமை ஆரம்பமாக வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க அதிகாரிகள் மற்றும் இந்தப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு ஒன்றின் இராஜதந்திரி ஆகியோரை மேற்கோள் காட்டி "அசோசியேட்டட் பிரஸ்" செய்தி சேவை இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம்

07

## பொருளாதாரச் சீரழிவை தடுக்க நடவடிக்கை தேவை

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஏப். 15

"ஆட்சியைப் பாதுகாக்கப் போவதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய சவால் விடுவதை விடுத்து, நாட்டின் பொருளாதாரச் சீரழிவைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் மீது பொய்க்

07

## நிரந்தரமான அரசியல் தீர்வொன்று புதிய அரசமைப்பு மூலம் வேண்டும்!



### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 15

இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை புதிய அரசியலமைப்பின் ஊடாக அடைய வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களது பிரதானமான அபிலாசை. அதோடு தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இன அழிப்புக்கான பொறுப்புக் கூறல் சம்பந்தமான முன்னேற்றங்களை

07

## திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் புத்தாண்டு பூசை வழிபாடு



மன்னார், ஏப். 15

பராபவ புத்தாண்டை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு

07

## அல்லைப்பிட்டி பகுதியில் மனித எலும்புக்கூடு மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 15

அல்லைப்பிட்டி பகுதியில் பற்றைக் காணி ஒன்றில் இனந்தெரியாத நபர் ஒருவரின் எலும்புக் கூடுகள் உக்கிய நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 4 முதல் 6

07



உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளமான நாடு-அழகான வாழ்க்கை அனைவருக்கும் உரித்தாக்குவோம்!

## புதுவருட வாழ்த்து செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 15

வளமான நாடு - அழகான வாழ்க்கை என்பதை அனைவருக்கும் உரித்தாக்குவதற்கு கைகோர்க்குமாறு அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்பாட்டுப் பகிர்வு உலகிற்கு முன்னால் எமது நாட்டின் அடையாளத்தையும், எமது சமூகங்களுக்கு இடையே நிலவும் சமூக-கலாசார பிணைப்பையும் சிறப்பாகப் பிரதிபலிக்கிறது.

நாட்டின் எதிர்கால அபிவிருத்திப் பாதையை, இந்த பெறுமதிமிக்க கலாசாரம் மற்றும் உன்னதமான வரலாற்று மரபுரிமைகளுடன் இணைந்தே தெரிவு செய்ய முடியும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

அதற்கமைய, எமது அனைத்து எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களும் அந்த பெறுமதியான மரபுரிமைகள் மற்றும் கலாசாரத்தின் மீது வலுவாக உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

அதேபோல், சூரிய பெயர்ச்சியைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் அனைத்துச் சடங்கு முறைகளின் பொதுவான எதிர்பார்ப்பானது, கூட்டுப்பண்பை மதிக்கும், பிறரையும் இயற்கையின் இருப்பையும் கௌரவிக்கும் ஒரு புதிய மனிதனை உருவாக்குவதாகும்.

புத்தாண்டின் சடங்கு முறைகளில் வெளிப்படும் கூட்டுப் பண்பின் குணாதிசயங்களும் விழுமியங்களும் அந்த சில நாட்களுக்கு மாத்திரமன்றி, முழு வருடமும் எமது நடத்தைகளில் பிரதிபலிக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

கடந்த வருடம் முகங்கொடுத்த பாரிய இயற்கை அனர்த்தத்தின் போது உள்ளக அதிர்வுகளுக்கு தாக்குப் பிடிக்கும் இயலுமையை உலகிற்கு காண்பித்தோம்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தின் போர்ச் சூழல் நிலைமையில் ஏற்பட்டுள்ள வெளிப்புறச் சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளது.

நாடென்ற வகையில் ஒன்றாக இந்த சவால்களை வெற்றி கொள்கையில் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் வெளிப்படுத்தப்படும் கூட்டுப் பண்பு மற்றும் பகிர்ந்துகொள்ளல் போன்ற பண்புகளினால், எமது வாழ்க்கையை மேலும் அர்த்தமுள்ளதாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என நான் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

அடைந்த வெற்றிகளை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதோடு, எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியில் தளராது முன்னேறி, “வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்பதை அனைவருக்கும் உரித்தாக்குவதற்கு கைகோர்க்குமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் -என்றார். (அ)

# அன்னை பூபதியின் உருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனி முல்லைத்தீவை அடைந்தது

முல்லைத்தீவு, ஏப். 15

அன்னை பூபதியின் 38ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்தினை தாங்கிய ஊர்தி பயணம் நேற்று முன் தினம் மாலை முல்லைத் தீவை அடைந்தது.

கடந்த 9ஆம் திகதி யாழ்ப் பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்திப் பவனி வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் முழுவதும் ஊர்வலமாக சென்று, இறுதி நாளில் மட்டக் களப்பில் உள்ள தியாகி அன்னை பூபதியின் சமாதி அமைந்துள்ள பகுதியை சென்றடையவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் பிரதான நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ள நிலையில் திங்கட் கிழமை மாலை முல்லைத்தீவு நகரினை அடைந்தது.

அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகளினால் 3 நாட்களில் ரூ.16 கோடி வருமானம்

கொழும்பு, ஏப். 15

கடந்த 10ஆம் திகதி முதல் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனங்கள் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபை 163,291,065 ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.

இந்த 3 நாள்களில் மொத்தம் 434,338 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியுள்ளன.

இதில் அதிகப்படியான வாகனப் போக்குவரத்தும் வருமானமும் 10ஆம் திகதி பதிவாகியுள்ளது. அன்றைய தினம் 161,847 வாகனங்கள் பயணித்துள்ளதுடன், 59,815,450 ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி 1,53,807 வாகனங்களுக்காக ரூ. 5,82,08,695 வருமானமும் 12-ஆம் திகதி 1,18,684 வாகனங்களுக்காக ரூ. 4,52,66,920 வருமானமும் ஈட்டியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வெடுக்குநாறிமலையில் வழிபாடுகள்



வவுனியா, ஏப். 15

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப்பிரிவில் ஒலுமடு கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர் ஆலயத்தில் தமிழ், சிங்கள வருடப்பிறப்பை முன்னிட்டு விசேட வழிபாடுகளும், பூசைகளும் பூசகர் மதிமுகராசா தலைமையில் இடம்பெற்றுள்ளன.

பெருந்திரளான பொதுமக்கள் வழிபாட்டில் பங்கேற்றனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் உள்ள ஆலயங்களிலும் நேற்று தமிழ், சிங்கள வருடப் பிறப்பை முன்னிட்டு விசேட வழிபாடுகளும், பூசைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (அ)

## பண்டாரகம வீதி விபத்து: 17 வயது இளைஞன் பலி!

கொழும்பு, ஏப். 15

களுத்துறை - பண்டாரகம பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 17 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் எதிரே வந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும், பின்னால் பயணித்தவரும் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பின்னால் அமர்ந்திருந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வாதுவ பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றதுடன், சம்பவம் தொடர்பில் மொரந்துடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நல்லிணக்கத்தை வலுப்படுத்த புத்தாண்டில் ஒன்றிணைவோம்!

## புத்தாண்டு வாழ்த்தில் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஏப். 15

“இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் வலுப்படுத்தும் இந்தப் புத்தாண்டில், அனைவரும் ஒன்றிணைந்து "வளமான வடக்கு மாகாணம்" என்ற இலக்கை அடைவோம்" என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

“இயற்கையோடு இணைந்து, சூரியனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் இந்தப் புத்தாண்டு, எமது பண்பாட்டோடு பின்னிப்பிணைந்த உன்னத திருநாளாகும். தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து கொண்டாடும் இப்பண்டிகையானது, இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் வலுப்படுத்தும் பாலமாக அமைகின்றது.

உலகளாவிய போர்ச் சூழலின் தாக்கம் எமது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள போதிலும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சிறப்பான தலைமைத்துவத்தால் மக்கள் விரைவாக மீட்சி பெற்று வருகின்றனர். நாட்டு மக்கள் மீது மேலதிக பொருளாதாரச் சுமைகளைச் சுமத்தாமல் இருப்பதற்கான காத்திரமான நிவாரணங்களை அரசு வழங்கியுள்ளது.

கடந்த கால சவால்களில் இருந்து மீண்டெழுந்து, வடக்கு மாகாணம் இன்று புதியதொரு எதிர்காலத்தை நோக்கி துரிதமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. விவசாயம், கடற்றொழில், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு என அனைத்துத் துறைகளிலும் நாம் அடைந்து வரும் முன்னேற்றங்கள் இந்தப் புதிய ஆண்டில் மேலும் பல மடங்கு சிறக்க வேண்டும்.

பேதங்களை மறந்து, அனைவரினதும் ஒன்றுபட்ட உழைப்பாலும் அர்ப்பணிப்பாலும் “வளமான வடக்கு மாகாணம்” என்ற இலக்கை நாம் நிச்சயம் எட்டுவோம். நேர்மறையான சிந்தனைகள் எமது மாகாணத்தையும் நாட்டையும் பொருளாதார சுபீட்சத்தை நோக்கி இட்டுச் செல்லட்டும்.

புதிய எதிர்பார்ப்புகளோடு பிறக்கும் இந்தப் புத்தாண்டு, மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சியையும் ஒளியையும் ஏற்றட்டும்.” - என்றுள்ளது. (அ)

# என்.டி.பி. வங்கி மோசடி குறித்து விசாரிக்க இலங்கைக்கு வரும் சர்வதேச பொலிஸார்!

கொழும்பு, ஏப். 15

என்.டி.பி. வங்கியின் தரவுக் கட்டமைப்புக்குள் ஊடுருவி 13.2 பில்லியன் ரூபா நிதியை மோசடி செய்த சம்பவம் தொடர்பில், சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் விரிவான விசாரணைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் மெய்நிகர் பணம்பயன்படுத் தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அது குறித்து விசாரணை நடத்த சர்வதேச பொலிஸாரின் விசேட நிபுணர் குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளது.

பிரான்ஸின் லியோன் நகரில் உள்ள சர்வதேச பொலிஸ் தலைமையகத்திடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாரிய மோசடி தொடர்பாக இதுவரை நால்வர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் வங்கியின் தலைமையகத்திலுள்ள கொடுப்பனவு தீர்வைப் பிரிவின் உதவி முகாமையாளர் மற்றும் அவரது சகோதரரும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிதி மோசடியினால் வங்கியின் எந்தவொரு வாடிக்கையாளரின் கணக்கு மீதிகளுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று என்.டி.பி. வங்கி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. வங்கியின் வழமையான செயற்பாடுகள் மற்றும் சேவைகள் எவ்வித தடையுமின்றித் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, என்.டி.பி. வங்கியின் மூலதன அளவு மற்றும் நிதி திரவத்தன்மை தொடர்பான விகிதங்கள், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைத் தேவைகளை விடவும் அதிக மட்டத்திலேயே காணப்படுகின்றன. எனவே, வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை குறித்து அச்சமடையத் தேவையில்லை என்று மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
15.04.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழக தேர்தல் பிரசாரங்களில் காணாமல்போன இலங்கை தமிழர் பிரச்னை

இலங்கை தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கவும் கூட்டாட்சி (சமஷ்டி) ஏற்பாடுகளை அதில் சேர்த்துக்கொள்ளவும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா நெருக்கு தலைக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்ராலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடந்த ஜனவரி நடுப்பகுதியில் கடிதம் ஒன்றை எழுதினார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசியப் பேரவை யின் தூதுக்குழு மாநிலத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு கொழும்புக்கு நெருக்குதல் கொடுக்க இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததையடுத்தே முதலமைச்சர் அந்த கடிதத்தை பிரதமருக்கு அனுப்பிவைத்தார்.

2024 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் "ஏக்கிராஜ்ய" அரசியலமைப்பைக் கொண்டுவரக்கூடிய ஆபத்து இருப்பதாக தமிழ்த் தேசியப் பேரவை கூறியதனாற் போலும் ஸ்ராலின் "ஏக்கியராஜ்ய" என்ற பதத்தையும் கடிதத்தில் குறிப்பிட் டிருந்தார்.

மாநில சட்டசபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நிலையில், தமிழ்நாட்டின் மற்றைய கட்சிகள் இலங்கை தமிழர் பிரச்னையை கையில் எடுப்பதற்கு முன்னதாக மோடிக்கு கடிதத்தை எழுதியதன் மூலம் ஸ்ராலின் முந்திக் கொண்டார் என்று அந்த நேரத்தில் பரவலாக விமர்சனங்கள் எழுந்தன.

ஒற்றையாட்சியை எதிர்க்கும் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் கூட்டாகச் செயற்படும் பட்சத்தில் தமிழ்நாட்டில் ஆதரவு அலையை உருவாக்குவதில் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்த முடியும் என்றும் இலங்கையில் தமிழர்கள் கொந்தளித்தால் தமிழ்நாட்டு மக்களும் கொந்தளிக்கத் தயாராயிருக்கிறார்கள் என்றும் பொன் னம்பலம் யாழ்.நகரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் நம்பிக்கையையும் வெளியிட்டார்.

ஆனால், மோடிக்கு ஸ்ராலின் கடிதம் எழுதி மூன்று மாதங்கள் கடந்து விட்ட நிலையில், அதுவும் தேர்தல் பிரசாரங்கள் சுட்டெரிக்கும் வெயிலை விடவும் அனலாகத் தீவிரமடைந்திருக்கும் நிலையில் இலங்கை தமிழர் பிரச்னை குறித்து எந்தப் பேச்சையும் காணவில்லை.

வழமையாக இலங்கைத் தமிழர் பிரச்னையில் மிகவும் தீவிரமான நிலைப்பாட்டை எடுக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் போன்றவர்கள் கூட இந்த தடவை தேர்தல் பிரசாரங்களில் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து கவனத்தை ஈர்க்கக் கூடியதாக எதையும் பேசவில்லை.

2025 இறுதிப்பகுதியில் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த திருமாவளவன் தான் தமிழ்த் தேசிய பேரவையின் தூதுக் குழுவினரை ஸ்ராலினிடம் கூட்டிச் சென்று சந்திக்க வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி திஸாநாயக்க கச்சதீவுக்குச் சென்றது குறித்து அப்போது வெளியிட்ட கருத்தைத் தவிர, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய்யும் கூட இலங்கைப் பிரச்னை பற்றி எதையும் பேசுவில்லை.

இந்த தடவை தமிழ்நாட்டு தேர்தல் பிரசாரங்கள் முழுமையாக மாநிலத்தின் பிரச்னைகளை மையப்படுத்தியவையாகவே அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தங்களுக்கு அரசியல் அனுகூலத்தைத் தரக்கூடிய ஒரு பிரச்னையாக இலங்கை தமிழர் பிரச்னையை தமிழகத்தின் கட்சிகள் குறிப்பாக பிரதான திராவிட இயக்கக் கட்சிகள் இனிமேலும் கருதவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

2024 பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களில் பிரதமர் மோடியும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் கூட காங்கிரஸுக்கும் தி.மு.க. வுக்கும் எதிராக கச்சதீவு விவகாரம் குறித்து பெரிதாகப் பேசினார்கள். தேர்தல் முடிந்த பிறகு அவர்கள் அதைப் பற்றி வாய் திறந்ததாக நாம் அறியவில்லை.

# ஹோர்முஸ் நீரிணையிலிருந்து திரும்பிச்சென்ற இரு கப்பல்கள்

தெஹ்ரான், ஏப். 15

ஈரான் துறைமுகங்களுக்கு எதிராக அமெரிக்கா இராணுவ முற்றுகையைத் தொடங்கியுள்ள நிலையில், அதன் உடனடித் தாக்கமாக குறைந்தது இரண்டு எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை அடையாமல் தமது பயணப் பாதையை மாற்றித் திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடல்சார் போக்குவரத்துத் தரவுகளை மேற்கோள் காட்டி அல் ஜெசீரா இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்காவின் முற்றுகை அமுலுக்கு வந்த சில மணி நேரங்களிலேயே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஷார்ஜாவிலிருந்து சீனா நோக்கிப் பயணித்த 188 மீற்றர் நீளமுள்ள ரிச் ஸ்டாரி என்ற எண்ணெய் தாங்கிக் கப்பல், நீரிணைக்கு அருகில் சென்றபோது திடீரெனத் திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், 175 மீற்றர் நீளமுள்ள மற்றுமொரு எண்ணெய் தாங்கிக் கப்பலான ஒஸ்ட்ரியாவும், ஹோர்முஸ் நீரிணையை நெருங்கிய வேளையில் தனது பயணப் பாதையை மாற்றிக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, அமெரிக்க மத்திய கட்டளை பணியகம் அறிவித்த இராணுவக் கட்டுப்பாடுகள், சர்வதேசக் கடல் வழிப் போக்குவரத்தில் உடனடியாகப் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதை இது உறுதிப்படுத்துகிறது.

அனுமதியின்றி நுழையும் கப்பல்கள் இடைமறிக்கப்பட்டு கைப்பற்றப்படலாம் என்ற அமெரிக்காவின் எச்சரிக்கையினால், ஏனைய கப்பல் நிறுவனங்களும் தற்போது மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# எரிசக்தி பதுக்கலை தவிர்க்கவேண்டும்!

## உலகளாவிய நிதி அமைப்புகள் கோரிக்கை

வாஷிங்டன், ஏப். 15

உலக நாடுகள் எரிசக்தி விநியோகத்தை பதுக்குவதையும், ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிப்பதையும் தவிர்க்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் சர்வதேச எரிசக்தி முகவரகம் ஆகிய அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அதிர்ச்சியை இத்தகைய நடவடிக்கைகள் மேலும் மோசமாக்கும் என இந்த அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இது குறித்து சர்வதேச எரிசக்தி முகவரகத்தின் தலைவர் பாத்திஹ் பிரோல் கூறுகையில், பல நாடுகள் எரிசக்தி இருப்புகளை தேக்கி வைப்பதையும், ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அனைத்து நாடுகளும் எரிசக்தி இருப்புகளை தடையின்றி சந்தைக்கு வர அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "முதலில் தீமை செய்வதை நிறுத்துங்கள்" என்று குறிப்பிட்டார்.

ஆசியா, துணை சஹாரா ஆபிரிக்கா மற்றும் சில தென் பசுபிக் தீவு நாடுகள் எரிசக்தி விநியோகம் குறித்து மிகுந்த கவலையில் இருப்பதாகவும், அந்த நாடுகளின் தலைவர்களைத் தான் சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திடீர் கட்டுப்பாடுகள் உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என பொருளாதார வல்லுநர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (அ)

# நெருங்கிய நண்பராக கருதப்படும் ட்ரம்பை கடுமையாக விமர்சித்த இத்தாலிய பிரதமர்!

ரோம், ஏப். 15

திருத்தந்தை 14ஆம் லியோ குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட விமர்சனங்கள், சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

ட்ரம்பின் இந்தச் செயலுக்கு இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தமது கண்டனத்தை பதிவு செய்துள்ளனர்.

ட்ரம்ப்புடன் நெருக்கமான நட்புறவைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, மிகவும் அரிதான முறையில் ட்ரம்பிற்குப் பகிரங்கமாகத் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "புனிதத் தந்தை குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் பயன்படுத்திய வார்த்தைகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்து கொண்டு, அமைதிக்காகக் குரல் கொடுப்பதும் போரை எதிர்ப்பதும் திருத்தந்தையின் முறையான கடமையாகும்." என குறிப்பிட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு ட்ரம்பின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற ஒரேயொரு ஐரோப்பியத் தலைவராக மெலோனி கருதப்படுகிறார்.

ஆரம்பத்தில் திருத்தந்தைக்கு ஆதரவாக மட்டும் அறிக்கை வெளியிட்ட மெலோனி, தற்போது நேரடியாக ட்ரம்ப்பின் பெயரைச் சுட்டிக்காட்டி தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, ட்ரம்பின் கருததுக்கு ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் தனது எக்ஸ் தளத்தில் திருத்தந்தை மீதான அவமதிப்பைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்

"அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் தூதரான இயேசு நாதரை அவமதிப்பதை எந்தவொரு சுதந்திர மனிதனும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஈரான் மக்கள் சார்பாக திருத்தந்தை மீதான இந்த விமர்சனத்தை நான் கண்டிக்கிறேன்," என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வரலாறு காணாத வருமானம்!

கொழும்பு, ஏப். 15

கடந்த 09ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரையிலான ஐந்து நாள்களில் மட்டும் இலங்கை போக்குவரத்துச் சபை 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிக வருமானத்தை ஈட்டி சாதனை படைத்துள்ளது.

சித்திரை புத்தாண்டு விசேட போக்குவரத்து சேவையின் கீழ், கடந்த 11ஆம் திகதி மாத்திரம் 213 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 15 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 02
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சூன்ய




**மேடம்**
சமயோஜித புத்தியால் எல்லா பிரச்னைகளையும் எளிதாக சமாளித்து வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மிதுனம்**
கணவன் மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் பகைத்து கொள்ள வேண்டாம். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**சிம்மம்**
விவாதங்களை தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். மதிப்பு கூடும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்து விடுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**விருட்சிகம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். தைரியமான முடிவுகள் எடுக்கும்நாள்

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி ஒத்துழைப்பார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளை அனுசரித்துப் செல்லுவது நல்லது. அதிகம் உழைக்க வேண்டும்.

# மொழியின் மீதும் சமயத்தின் மீதும் பற்றுறுதியுடன் செயல்பட வேண்டும்

## இந்து குருமார் அமைப்பு வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.15

மொழியின் மீதும் சமயத்தின் மீதும் பற்றுறுதியுடன் செயல்பட வேண்டும் என்றும் பரம்பொருள் அருளால் இன்பமிகு வாழ்க்கைக்கு வாழ்த்துகள் என்று இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவசிறீ. க. வைத்தீஸ்வர குருக்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மங்கலச்சிறப்புடன் பராபவ எனும் நாமத்துடன் சித்திரை புத்தாண்டு மலர்ந்துள்ளது.

எமது தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளையும் துயரங்களையும் அவலங்களையும் சந்தித்து கடந்து வந்துள்ளார்கள். இன்றுவரை பல்வேறு விதமான உரிமை மறுப்புக்களை எதிர்கொண்டு தான் பயணிக்கிறார்கள்.

அண்மையில் வெளியான கல்வி பெறுபேறுகள் சில பெருமையை வழங்கினாலும், சமயம் சார்ந்த நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ளோம். விழுமிய மேம்பாடு உயரிய நிலையில் உள்ளது என கூற முடியாதுள்ளமை மிகவும் வேதனை தருகிறது.

இவற்றிலிருந்து நாம் மீண்டு உயர்வு பெற வேண்டும். இதற்கு நாம் ஒவ்வொருவரும் தான் பொறுப்பு. ஆகவே பெற்றோர்கள், பெரியோர்கள் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம். ஒவ்வொருவரும் மொழியின் மீதும் சமயத்தின் மீதும் பற்றுறுதியுடன் செயல்பட வேண்டும்.

இவை எல்லாமே நிகழ வேண்டும் என்றால் திருவருளும் துணை நிற்க வேண்டும். இந்த தருணத்தில் திருவருளும் குருவருளும் ஒருசேர பிரார்த்திப்போம். நற்பாங்குடன் அனைத்தும் சிறப்புற பிரார்த்திப்போம். அனைவர் வாழ்விலும் அமைதியானது நிலை பெறட்டும். கல்வியிலும் கலைகளிலும் சிறப்புடன் மாணவர்கள் உயர்வு பெறட்டும். அனைவரும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ்க வாழ்க வாழ்கவே என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பழைய பிணக்குகளை மறந்து ஒற்றுமையுடன் பயணிப்போம்

## சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன

கொழும்பு, ஏப். 15

பழைய பிணக்குகளை மறந்து ஒற்றுமையுடன் பயணிப்போம் என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நிலவி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு படிப்படியாக மீண்டு வரும் ஒரு கால கட்டத்தை நாம் தற்போது கடந்து கொண்டிருக்கிறோம். அதே சமயம், கடந்த ஆண்டில், டித்வா போன்ற ஒரு பெரும் இயற்கை பேரழிவையும் ஒரு நாடாக நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், ஒரு இலங்கை தேசமாக நாம் மீண்டும் எழுந்து நிற்க முடிந்த வலிமையானது, மத்திய கிழக்கில் நாம் தற்போது சந்தித்து வரும் இராணுவ சவாலை எதிர்கொள்ளவும் நமக்கு உதவும். எனவே, இப்புத்தாண்டு, ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை போன்ற புத்தாண்டின் உண்மையான அர்த்தங்களை பிரதிபலிக்கும் ஆண்டாக அமையும் என்று நான் நம்புகிறேன்.- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பன்னாலையில் திருமந்திர சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப். 15

பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திர சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 01 வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமூலநாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ் சைவப்புலவர் நித்திய பாபுதரன் நிகழ்த்தும் "தவயோகியின் திரு அவதாரம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# மதுபோதையில் கவனவீனமாக வாகனம் செலுத்த வேண்டாம்!

கொழும்பு, ஏப். 15

புத்தாண்டு காலத்தில் மது போதையிலும் கவனவீனமாகவும் வாகனங்களை செலுத்த வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

புத்தாண்டு காலத்தில் இடம் பெறும் வீதி விபத்துக்களில் அதிகரிப்பு காணப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யூ. வூட்லர் தெரிவித்தார்.

2026 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கடந்த 4 மாத காலப் பகுதிக்குள் இடம்பெற்ற பாரிய வீதி விபத்துக்களில் 713 பேர் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 248 பேர் மோட்டார் சைக்கிள் சாரதிகள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ)

# "அனைவருக்கும் வலிமை கிடைக்கட்டும்"

கொழும்பு, ஏப். 15

அனைத்து வேறுபாடுகளையும் மறந்து, அன்பையும் கருணையையும் முன்னிறுத்தி, இலங்கையர்களாக ஒன்றிணைந்து எழுந்து நின்று, சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கு இந்த புத்தாண்டில் நம் அனைவருக்கும் வலிமை கிடைக்கட்டும் என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த புத்தாண்டு பிறப்பின் ஊடாக ஒவ்வொரு இல்லத்திலும், இதயத்திலும் அமைதியும், மகிழ்ச்சியும், சுபீட்சமும் நிலைத்திருக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கணேமுல்ல சஞ்சீவவின் உதவியாளர் இந்தியாவில் கைது!

கொழும்பு, ஏப். 15

பாதாள உலகக் குழு உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய உதவியாளர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டார்.

கம்பஹா பகுதியைச் சேர்ந்த "உடுகம்பல அலயா" என அழைக்கப்படும் நபரே இவ்வாறு இந்திய பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இவர் ஒரு போதைப்பொருள் கடத்தல்காரர் என்றும் அடையாளம் காணப்பட்டார்.

இந்தியப் பாதுகாப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் இலங்கை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, அவரை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 2 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான

# குஷ் போதைப்பொருளுடன் இந்திய பிரஜை சிக்கினார்!

கொழும்பு, ஏப். 15

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்த "குஷ்" போதைப் பொருளுடன் வெளிநாட்டு பிரஜை ஒருவரை சுங்கப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று செவ்வாய்க் கிழமை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர் 24 வயது இந்தியப் பிரஜை என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் இந்த போதைப் பொருள் தொகுதியை தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்து, பின்னர் மலேசியாவின் கோலாலம்பூர் நகருக்கு சென்று, அங்கிருந்து மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த பயணப் பையினுள் இருந்த அட்டைப் பெட்டியின் பக்கச்சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த நிலையில், 2 கோடியே 8 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 02 கிலோ 87 கிராம் எடையுள்ள "குஷ்" போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், மேலதிக விசாரணைகளுக்காக குறித்த பயணி மற்றும் போதைப்பொருள் தொகுதி கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்தனர். (எ)

### டித்வா புயலால் பாதிக்கப்பட்ட

# வீடுகள், வணிக கட்டடங்களுக்கு இழப்பீடு வழங்க விசேட திட்டம்

கொழும்பு, ஏப். 15

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் வணிக கட்டடங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விசேட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், பாதிக்கப்பட்ட இடங்கள் முக்கியமாக அதி அபாயகரமானவை, மத்திய அபாயகரமானவை மற்றும் குறைந்த அபாயகரமானவை என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அதி அபாயகரமான பிரிவின் கீழ் உள்ள வீடுகள் மீண்டும் முன்னுரிமை 1, முன்னுரிமை 2 மற்றும் முன்னுரிமை 3 என துணைப் பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

இந்த முன்னுரிமை பட்டியலின் அடிப்படையிலேயே இழப்பீடு வழங்கப்படும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதி அபாய வலயத்தில் உள்ள அனைவரும் மீளக் குடியேற்றப் பட்ட போதிலும், அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியை வினைத்திறனாக பகிர்ந்தளிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் எந்த முன்னுரிமை பிரிவைச் சேர்ந்தவர் என்பதை அந்தந்த பிரதேச செயலகத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடியும்.

ஒரு நிலப்பரப்பு ஒரே நேரத்தில் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும், முன்னுரிமை வரிசைப்படியே இழப்பீடு வழங்கப்படும்.

இதன் காரணமாக, உங்கள் அயலவருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், முதற்கட்டமாக உங்களுக்கு அந்த நிதி கிடைக்காமல் போகலாம் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# நாட்டில் பிற்பகலில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 15

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை வவுனியா மாவட்டங்களிலும் மற்றும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

சூரியனின் வடதிசை நோக்கிய நகர்வு காரணமாக, இன்று வரையில் இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது. (எ)

# மின்னல் தாக்கம்: தென்னை மரம் தீப்பற்றி எரிந்தது

புத்தளம், ஏப். 15

புத்தளம், கடையாகுளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரணமாக தென்னை மரம் ஒன்று தீப்பற்றி எரிந்தது.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக நிலவி வந்த கடும் வறட்சியுடனான காலநிலையில், திங்கட்கிழமை முதல் சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்படி, நேற்று முன்தினம் மாலை முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடி மற்றும் மின்னலுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

இவ்வாறானதொரு கால நிலையிலேயே, கடையாகுளம் பகுதியில் உள்ள தென்னை மரம் ஒன்றின் மீது மின்னல் தாக்கியதில் அது தீப்பற்றி எரிந்தது. நீண்ட கால வறட்சிக்கு பின்னர் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# சிறைச்சாலை ஆணையர் துஷாரவின் அடிப்படை மனித உரிமைகள் மீறல்!

கொழும்பு, ஏப். 15

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கைது செய்யப்பட்டமையும், அவரது பணி இடைநீக்கமும் முறையான சட்ட நடைமுறைகளின்படி இடம்பெறவில்லை எனவும், இதன் காரணமாக அவரது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

துஷார உபுல்தெனிய சார்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் முடிவிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கைது மற்றும் பணி இடைநீக்கத்தின் ஊடாக குற்றப் புலனாய்வுத் திணைக்களமும், நீதி அமைச்சின் செயலாளரும் அரசமைப்பை மீறியதாக ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தி கைதி ஒருவரை விடுவித்ததாக துஷார உபுல்தெனிய மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

விசாரணைகள் பக்கச்சார்பின்றி நடைபெற வேண்டும் எனக் கூறி, 2025 ஜூன் 09 ஆம் திகதி அன்று கூடிய அமைச்சரவை துஷார உபுல்தெனியவை பணி இடைநீக்கம் செய்ய தீர்மானித்தது.

ஜூன் 10, 2025 அன்று துஷார உபுல்தெனிய கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், உபுல்தெனியவின் மனைவி தாக்கல் செய்த முறைப்பாட்டை விசாரித்த ஆணைக்குழு பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளது,

பாதிக்கப்பட்டவரை கைது செய்யும் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை.

துஷார உபுல்தெனிய திணைக்களத் தலைவராக இருந்தபோதும், அவரது அதிகாரங்கள் ஏனைய அதிகாரிகளுக்கு பகிரப்பட்டிருந்த நிலையில், அவரை பணி இடைநீக்கம் செய்தது கேள்விக்குரியது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுவனை பலிகொடுத்து புதையல் தோண்ட முயற்சி

## 9 பேருக்கும் விளக்கமறியல்

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு, மண்முனை பகுதியில் 16 வயது சிறுவன் ஒருவரை பலிகொடுத்து புதையல் தோண்ட முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட மொறட்டுவ பிரதேச செயலகத்தின் பிரதம கணக்காளர் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர் உள்ளிட்ட 9 பேரையும் வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை பிரதான வீதியிலுள்ள ஆலயம் ஒன்றுக்கு அருகாமையில் உள்ள காணியில் குழுவொன்று புதையல் தோண்டுவதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவினருக்கு கடந்த மார்ச் 31ஆம் திகதி இரவு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அங்கு புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மொறட்டுவ பிரதேச செயலகத்தின் பிரதம கணக்காளர், ஓய்வுபெற்ற இராணுவ வீரர் மற்றும் மொறட்டுவ, கட்டுகஸ்தோட்டை, இங்கிரிய போன்ற பகுதிகளைச் சேர்ந்த 9 பேரை கைது செய்தனர். அத்துடன் அங்கிருந்த பூஜை பொருட்களையும் கைப்பற்றி காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த முதலாம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, குறித்த கும்பலால் அழைத்து வரப்பட்ட 16 வயது சிறுவன் தொடர்பில் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகின.

குறித்த சிறுவன் பொலநறுவை பகுதியைச் சேர்ந்தவர் என்றும், மூன்று தலைமுறைகளில் பிறந்த முதல் ஆண் பிள்ளை மற்றும் அபூர்வமான மூன்று நட்சத்திரங்கள் ஒரே நேரத்தில் உச்சத்தில் இருந்தபோது பிறந்தவர் என்பதால், அவரைப் பலிகொடுப்பதற்காகவே அழைத்து வந்ததாக சிறுவன் தரப்பு சட்டத்தரணி வாதிட்டார்.

புதையல் தோண்டியவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்தச் சிறுவன் நிலத்தடியில் புதையல் இருக்குமிடத்தை "மை" போட்டுத் துல்லியமாக பார்க்கும் திறனுடைய ஒரு மந்திரவாதி என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான், சிறுவனை சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு இல்லத்தில் வைக்குமாறும், ஏனையோரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

சம்பவம் நடைபெற்ற மண்முனை பகுதியானது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழர் ஆட்சிக் காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக திகழ்ந்தது. சோழ குலத்தைச் சேர்ந்த நாச்சியார் என்பவர் மண்முனையை மையமாகக் கொண்டு "நெல்லிக்குளம்" எனும் குளத்தை அமைத்து ஆட்சி செய்ததாக கூறப்படுகிறது. இத்தகைய வரலாற்றுச் சுவடுகள் நிறைந்த பகுதிகளில் திட்டமிட்டு புதையல் தோண்டுவது, தமிழ் மன்னர்களின் தொல்பொருள் சான்றுகளை அழிக்கும் செயலாக அமையும் என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# கரடி பொம்மைக்குள் ஐஸ் விவகாரம்: கைதான நபருக்கு விளக்கமறியல்

கல்முனை, ஏப். 15

கொரியர் சேவை ஊடாக கரடி பொம்மைக்குள் மறைத்து "ஐஸ்" போதைப்பொருளை கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி, நேற்று முன்தினம் சந்தேக நபர் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், வழக்கினை ஏப்ரல் 20ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

கைதான 43 வயதுடைய சந்தேக நபர், காரைதீவு பிரதேச சபையில் "தோடம்பழம்" சுயேச்சைக் குழுவின் முன்னாள் உறுப்பினராக பணியாற்றியவர் ஆவார். கொரியர் மூலம் வந்த விளையாட்டுப் பொருட்களில் இருந்த கரடி பொம்மையின் கழுத்துப் பகுதியில் சூட்சுமமாக மறைக்கப்பட்டிருந்த 107 கிராம் ஐஸ் போதைப்பொருள் இவரிடமிருந்து மீட்கப்பட்டது.

அத்துடன், போதைப்பொருள் அளக்கப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் தராசு, 2 தொலைபேசிகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பனவும் சான்றுப் பொருட்களாக கைப்பற்றப்பட்டன. (எ)



# கட்டடத்திலிருந்து வீழ்ந்து 27 வயது இளைஞன் பலி!

கொழும்பு, ஏப். 15

கொள்ளுப்பிட்டி, சீ. வி. அவென்யூ பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து கீழே விழுந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் என்று அடையாளம் காணப்பட்டார்.

நிர்மாணிக்கப்பட்டு வரும் குறித்த கட்டடத்தின் மூன்றாவது மாடியில் சாரக்கட்டு மூலம் இரும்பு பாகம் ஒன்றை பொருத்த முயன்றபோது, கால் வழுக்கி விழுந்ததில் இந்த விபத்து நேர்ந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# திருகோணமலையில் விபத்து: இரு இளைஞர்கள் படுகாயம்

திருகோணமலை, ஏப். 15

திருகோணமலை- சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விமானப்படை தளத்துக்கு அருகாமையில் உள்ள திருகோணமலை- மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மோட்டார் சைக்கிள்- வான் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இதில் 24, 25 வயதுடைய இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் திரியாய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர். காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# காத்தான்குடியில் நவீன உள்ளக விளையாட்டு அரங்கு

மட்டக்களப்பு, ஏப். 15

காத்தான்குடி ஆற்றங்கரை பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, நவீன வசதிகளுடன் கூடிய உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்கும் திட்டம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், இப்பகுதியின் முழுமையான முன்னேற்றத்தை நோக்கமாக கொண்ட ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

# பாரம்பரிய மரபுரிமையை பாதுகாப்பது மிக அவசியம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 15

பாரம்பரியத்தின் மரபுரிமையை பாதுகாத்து எதிர்காலத்துக்கு கொண்டு சேர்ப்பது மிகவும் அவசியமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு வாழ்த்து செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு என்பது நம்மிடம் உள்ள மகத்தான கலாசார விழாவாகும்.

ஒரு கலாசார விழாவின் அடித்தளம் உருவாகுவது அதில் காணப்படும் ஆன்மீக, நெறிமுறை, கலாசார மற்றும் பொழுதுபோக்கு காரணிகளின் அடிப்படையில் ஆகும்.

தமிழ், சிங்கள புத்தாண்டு இந்த அனைத்து காரணிகளின் வழியாகவும் நமக்கு ஒரு மகத்தான பாரம்பரியத்தின் மரபுரிமையை வழங்கியுள்ளது.

இந்த மரபுரிமையை பாதுகாத்து எதிர்காலத்துக்காக பேணிக்காத்துச் செல்வது நமது கடமையாகும்.

அத்தகைய மரபுரிமையின் செயல்முறையில் சமூகத்தினுள் நிச்சயமற்ற உணர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுவது அல்லது அத்தகைய நிகழ்வுகளை சரியான முறையில் கையாளுவதில் அரசாங்கம் தவறுவதென்றால், அது நம்மிடம் உள்ள கலாசார மரபுரிமைகளைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் பொறுப்பை புறக்கணிப்பதாகும்.



புத்தாண்டு சுப நேரம் தொடர்பில் எழுந்த சர்ச்சையில் அரசாங்கம் தலையிட்ட விதம், நமது கலாசாரத்தின் மதிப்பீடுகள் மீது அது காட்டும் அக்கறை கேள்விக்குரியது என்பதை வெளிப்படுத்துகின்றது.

புத்தாண்டின் உதயம் என்பது கடந்த தவறுகளை திருத்திக்கொண்டு புதிய வருடத்தில் அடியெடுத்து வைப்பதாகும். கடந்த ஆண்டில் நாட்டு மக்கள் பல சவால்களை எதிர்கொண்டனர் என்பது இரகசியமில்லை.

கடுமையான பொருளாதார அழுத்தத்தில் சமூகத்தின் எல்லா தரப்பு மக்களும் மன நிம்மதியின்றி தம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

அத்தகைய சூழ்நிலையில் தேவையானது குறுகியகால தீர்வுகளல்ல, நீண்டகால தீர்வுகளின் வழியாக மக்களை வலிமைப்படுத்துவதாகும்.

புத்தாண்டில் அதற்கான நிலையான செயல்திட்டத்துக்கு நாம் முழுமையாக அர்ப்பணிப்போம் என்பதை தெரிவிக்கின்றேன்.

தமிழ், சிங்கள புத்தாண்டு அமைதியாக நமக்குச் சொல்லிக் கொடுக்கும் நல்லிணக்கம் பற்றிய மகத்தான பாடத்தை வழிகாட்டியாக கொண்டு அதற்காக நாம் அர்ப்பணிப்போம் என்று சஜித் பிரேமதாஸ மேலும் வலியுறுத்தியுள்ளார். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புத்தாண்டு பயணங்களில்...

2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் இலங்கையின் வீதிகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கவலையளிக்கும் வகையில் அதிகரித்துள்ளது.

ஜனவரி 1 முதல் இதுவரையான காலப்பகுதியில் 713 பேர் வாகன விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர்.

பலியானவர்களில் 248 பேர் உந்துருளி ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களைக் குறைக்க அதிவேக நெடுஞ்சாலைகள் உட்பட பிரதான வீதிகளில் விசேட சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் மற்றும் அபாயகரமாக முந்திச் செல்பவர்களைக் கண்டறிய விசேட காவல்துறை குழுக்கள் மற்றும் நடமாடும் ரோந்துப் பணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர குறிப்பிட்டுள்ளார்.

வீதி விபத்துக்கள் மட்டுமன்றி, புத்தாண்டுச் சுற்றுலாக்களின் போது நீர் நிலைகளில் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்தும் பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

ஆறு, குளம் மற்றும் கடலில் நீராடச் செல்லும் போது மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், அறிமுகமில்லாத நீர் நிலைகளில் இறங்குவதைத் தவிர்க்குமாறும் சுற்றுலாப் பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியாக அமைய, பாதுகாப்பு விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறு அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

## மத்திய கிழக்கு...

வளர்ந்து வரும் நாடுகளின் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது.

எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடுகளும், போதிய நிதி கையிருப்பு இல்லாத வளரும் நாடுகளுமே இந்தப் பொருளாதார அதிர்ச்சியால் கடுமையாகப் பாதிக்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் ஊதியக் குறைவு காரணமாக, அந்த நாடுகளிலிருந்து வரும் பணம் குறையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பொருளாதார சேதங்களைக் கட்டுப்படுத்த போரை உடனடியாகவும் ஒழுங்காகவும் முடிவுக்குக் கொண்டு வருவதே மிகச்சிறந்த வழியாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களுக்கான நிவாரணம்: எரிபொருள் விலையைக் குறைக்க மானியம் வழங்குவதை விடுத்து, பாதிக்கப்பட்ட ஏழைக் குடும்பங்களுக்கு நேரடியாக நிதி உதவி வழங்குமாறு நாடுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எதிர்கால அதிர்ச்சிகளைத் தாங்குவதற்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாற்றங்களை நாடுகள் விரைவுபடுத்த வேண்டும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யா - உக்ரைன் போரின் போது ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார நெருக்கடியைப் போன்றதொரு சூழல் தற்போது மீண்டும் உருவாகியுள்ளது என சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் கவலை வெளியிட்டுள்ளது. (அ)

## பாதிக்கப்பட்ட...

புதிய வீட்டிலேயே இந்நிகழ்வு இடம்பெற்றது.

முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டின் கீழ், ஐந்து மாத காலப்பகுதிக்குள் இந்த வீடு கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன், கல்நேவ பிரதேச செயலாளர் பிரிவில் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்காக நிர்மாணிக்கப்படும் ஆறு புதிய வீடுகளில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், இப்பிரதேச செயலாளர் பிரிவில் பகுதியளவில் சேதமடைந்த 66 வீடுகளுக்கான இழப்பீடுகளும் தற்போது வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

பிரதேச மக்களுடன் இணைந்து புதிய இல்லத்தில் புத்தாண்டு சடங்குகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அங்கு வருகை தந்திருந்த மக்கள் அனைவருக்கும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அதேபோன்று, ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்த அப்பகுதி மக்கள், ஜனாதிபதிக்கும் தமது புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (அ)

## கம்பஹாவில்...

இடம்பெற்றன.

சம்பிரதாயபூர்வமாக அமைந்த புண்ணிய காலத்தில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கம்பஹா, மெதகம சுனந்தாராம விகாரைக்கு விஜயம் செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது, இலங்கை ராமஞ்ஞ மகா நிகாயவின் காரக சங்க சபை உறுப்பினரும், மெதகம சுனந்தாராம தர்மதூத பிரிவெனா மகா விகாரையின் விகாராதிபதியுமான வணக்கத்திற்குரிய துன்மோதர சமித்த தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

சமய வழிபாடுகளைத் தொடர்ந்து, கம்பஹா திரு. தர்ஷன வீரசிங்கவின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டு கலாசார விழாவில் பங்கேற்ற பிரதமர், "வேலை ஆரம்பிக்கும்" சுபவேளை உதயமானதும், இல்லத்தினரின் அழைப்பின் பேரில் அவ்வீட்டு வளாகத்தில் மரக்கன்றொன்றை நட்டுவைத்தார். புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, வெளிநாட்டு விவகார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரும் இதன்போது பிரதமருடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டுவைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, பிரதமர் அங்கிருந்த சிறுவர்களுடன் பாரம்பரிய தேசிய விளையாட்டுகளில் ஈடுபட்டார்.

தொடர்ந்து வந்த சுபவேளையில், கல்வி கற்பதில் ஈடுபட்டிருந்த சிறுவர்களுடன் இணைந்து அவர்களுக்கு எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் வழிகாட்டிய பிரதமர், நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டுக்கான சுப ஆரம்பத்தையும் உறுதிப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பிரதமரும் ஏனைய அதிதிகளும் இல்லத்தினருடன் கைவிசேடம் செய்தல், பரிசுப் பரிமாற்றம் ஆகியவற்றில் பங்கேற்றனர். பின்னர் புத்தாண்டுக்கான உணவு உண்ணும் சடங்கிலும் கலந்துகொண்டு ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் சௌபாக்கியம் மிக்க புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர், இலங்கை எதிர்கொண்ட பல்வேறு சவால்களைச் சரியாக முகாமைத்துவம் செய்வதற்குப் பங்களிப்பு வழங்கிய உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் அனைத்து இலங்கையர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார். (அ)

## நிரந்தரமான அரசியல்...

இந்த புத்தாண்டில் எதிர்பார்க்கின்றோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு,களுவாஞ்சிகுடியில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த புத்தாண்டு எமது விசேடமாக தமிழ் மக்களுடைய அபிலாசைகள் அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

மிக நீண்ட காலமாக இந்த நாட்டில் தமிழ் மக்கள் ஒரு நிரந்தரமான தீர்வு ஒன்றினை சமாதான முறையில் வாழ்வதற்கான ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் இலங்கை தமிழ் அரசு கட்சியாகிய நாங்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் சார்பிலே தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பிரதான கட்சியாக இருக்கின்றது.

அந்த வகையில் இந்த வருடத்துக்குள்ளேயும் நாங்கள் எங்களுடைய மக்கள் சார்பிலே மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை காண வேண்டும் என்பதற்காக எங்களது கடமைகளை சரியாக செய்ய எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பாக இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை புதிய அரசியலமைப்பின் ஊடாக அடைய வேண்டும் என்பதுதான் எங்களது பிரதானமான அபிலாசை.

அதோடு எங்களது பொறுப்பு கூறல் அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இன அழிப்புக்கான பொறுப்புக் கூறல் சம்பந்தமான முன்னேற்றங்களை நாங்கள் காண வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு எமது பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறாமல் இருக்கும் மாகாண சபை தேர்தல் வடகிழக்கு மாகாணங்களில் அதை நடைபெற வேண்டும். எங்களது மக்களின் நிலப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறாக தமிழ் மக்கள் தொடர்ச்சியாக முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வுகள் இந்த ஆண்டுக்குள்ளே எட்டுவதற்கான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என்று நாங்கள் இறைவனை பிரார்த்திகின்றோம்.

விசேடமாக நாட்டிலே தற்போது பொருளாதாரத்தினால் மக்கள் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக அரசு ஊழியர்கள் அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு சம்பளத்துடன் ஒவ்வொரு மாதமும் உழைப்பவர்களுக்கு இந்த பொருளாதார நெருக்கடிகள் மிகவும் கஷ்டமாக இருக்கின்றது.

இது சம்பந்தமாக நாங்களும் எங்களது கரிசனைகளை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

அதேபோலதான் அரசாங்கத்தினுடைய இலவசமாக கொடுக்கும் கொடுப்பனவுகளும் கூட அஸ்வசும பயனாளிகளுக்கு மாத்திரம் கிடைப்பது சம்பந்தமாகவும் எமது கவனத்தை செலுத்தியிருக்கிறோம்.

அத்தோடு இந்த அஸ்வசும பயனாளிகளின் தெரிவுகள் சம்பந்தமாக கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்கின்றதா என்ற கேள்விகள் இருக்கின்றன.

இருந்தபோதிலும் இந்த நல்நாளிலே எத்தனை பிரச்னைகள் வந்தாலும் நாங்கள் அனைவரும் ஒரு சுபிட்சமான நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி நாங்கள் அனைவரும் பயணிக்க வேண்டும்-என்றார். (அ)

## அல்லைப்பிட்டி...

மாதங்களுக்கு முன்னர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட ஒருவரது எலும்புக் கூடே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக சந்தேகம் தெரிவிக்கும் ஊர்காவற்றுறை பொலிஸார், குறித்த எலும்புக் கூடுகள் தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ உடற்கூற்று பின்னரே உறுதியாக கூறமுடியும் என்றும் தெரிவித்தனர்.

முன்னதாக குறித்த பகுதியில் பற்றைக் காணி ஒன்றில் எலும்புக் கூடுகள் இருப்பதாக பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமகன் ஒருவரால் தகவல் வழங்கப்பட்ட நிலையில் நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் குறித்த எலும்புக் கூடுகளை அடையாளம் கண்டதாகவும், இதனடிப்படையில் குறித்த எலும்புக்கூட்டை நீதிபதி, மரண விசாரணை அதிகாரி மற்றும் கிராம சேவகர் முன்னிலையில் மீட்டு மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தனர்.

குறித்த எலும்புக் கூடு எரிந்த நிலையில் தோற்றமளிப்பதாக சந்தேகிக்கப்படும் நிலையில் இந்த விடயம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொருளாதார...

குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதன் மூலம் இந்த ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என்று எதிர்க்கட்சிகளுக்குப் பிரதமர் ஹரிணி அமரசூரிய எச்சரிக்கை விடுத்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளின் பிரேரணைகளைத் தவிடுபொடியாக்குவோம் எனப் பிரதமர் கூறுவது நகைப்புக்குரியது என்று சுட்டிக்காட்டிய அவர், "பாராளுமன்றத்தில் பிரேரணைகளை முறியடிக்கலாம், ஆனால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அதிருப்தியை அரசால் ஒருபோதும் முறியடிக்க முடியாது. மக்களின் ஆணை இப்போது அரசுக்கு எதிராகத் திரும்பத் தொடங்கியுள்ளது" என்றும் கூறினார்.

"ஊழல் ஒழிப்பு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு பற்றிப் பேசும் அரசு, கடந்த சில மாதங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எதனையுமே நிறைவேற்றவில்லை. விலைவாசி உயர்வால் மக்கள் திண்டாடும் நிலையில், புள்ளிவிவரங்களைக் காட்டி அரசு காலத்தை வீணடிக்கின்றது." என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

"எதிர்க்கட்சிகளை முடக்கிவிடலாம் என அரசு கனவு காண வேண்டாம். பொய்ப் பிரசாரங்கள் மூலம் ஆட்சியைத் தக்கவைக்க முயல்வது தேசிய மக்கள் சக்தியே தவிர எதிர்க்கட்சிகள் அல்ல. அரசின் தோல்விகளைத் தொடர்ந்து அம்பலப்படுத்துவோம்." என்றும் அவர் திடமாகக் கூறினார்.

ஜனநாயக ரீதியான எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும், அரசு தனது அதிகாரத் தோரணையை விடுத்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் வலியுறுத்தினார். (அ)

## திருக்கேதீஸ்வரம்...

- பராபவ வருடப்பிறப்பு நேற்று காலை 8: 40 நிமிடத்துக்கும் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி நேற்று காலை 9: 32 நிமிடத்துக்கு பிறந்துள்ளது.

தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயத்தில் காலை வழிபாடுகள் நடைபெற்றன. திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு தியாகராஜா கருணாநந்த குருக்கள் தலைமையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (அ)

## அமெரிக்கா...

பாகிஸ்தானில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித இறுதி உடன்பாடுகளும் எட்டப்படாத நிலையில், இந்த அடுத்தகட்ட சந்திப்பு மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

குறிப்பாக, போரினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஈரான் கோரியுள்ள 270 பில்லியன் டொலர் இழப்பீடு மற்றும் பிராந்திய பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து இந்தச் சுற்றில் விரிவாக ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# புத்தாண்டு வாரத்தில் விபத்துகள் அதிகரிப்பு

## 29,000 பேர் சிகிச்சையில்

கொழும்பு, ஏப். 15

புத்தாண்டு வாரத்தில் விபத்துகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், விபத்துகளை தடுப்பதில் தொடர்பில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில் நாடளாவிய ரீதியில் அண்மை காலங்களில் ஏற்பட்ட விபத்துகள் காரணமாக சுமார் 29 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தொற்றுநோய் பிரிவின் விபத்துத் தடுப்புப் பிரிவின் சமூக நல மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 13 இலட்சம் பேர் விபத்துகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதுடன், அவர்களில் பெரும்பான்மையானோர் புத்தாண்டு காலங்களிலேயே அனுமதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்துடன் ஒப்பிடுகையில், மற்ற மாகாணங்களில் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதாகவும் சமூக மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார். (அ)

# மூன்று பிள்ளைகளின் தாயார் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

## தேராவில் பகுதியில் சோகம்

முல்லைத்தீவு, ஏப். 15

முல்லைத்தீவு, விசுவமடு தேராவில் பகுதியில் பாதுகாப்பற்ற கிணறு ஒன்றிலிருந்துபெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விசுவமடு தேராவில் பகுதியில் வசிக்கும் 52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண் அப்பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணறு ஒன்றில் வீழ்ந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மீட்கப்பட்ட சடலம் தற்போது உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறப்பிற்கான காரணம் விபத்தா அல்லது வேறு ஏதேனும் காரணங்களா என்பது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# 24 மணித்தியாலங்களில் 520 பேர் கைது!

கொழும்பு, ஏப். 15

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் போது கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 520 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்களில் சிலரது சட்டவிரோத சொத்துக்கள் குறித்து மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 6 பேருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்று மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 179 கிராம் ஹெரோயின் 228 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஆட்சியைக் கவிழ்க்கமுடியாது! எதிரணியின் சூழ்ச்சி பலிக்காது!



## பிரதமர் ஹரிணி கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 15

தேசிய மக்கள் சக்தி அரசின் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதன் மூலம் இந்த ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் மற்றும் அரசியல் நகர்வுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசைக் கவிழ்க்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்படும் எந்தவொரு பிரேரணையையும் முறியடிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

"இந்த அரசுக்கு எதிராக எத்தனை பிரேரணைகள் கொண்டுவரப்பட்டாலும், அவை அனைத்தையும் தவிடுபொடியாக்குவோம்" என்றும் அவர் சூளுரைத்தார்.

மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாகியுள்ள இந்த அரசு, திட்டமிட்ட பொய்ப் பிரசாரங்களால் வீழ்ந்துவிடாது என்று சுட்டிக்காட்டிய அவர், அரசியல் இலாபத்துக்காக முன்னெடுக்கப்படும் இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் எத்தனை தடைகளை ஏற்படுத்தினாலும், அரசு முன்னெடுத்துள்ள ஊழல் ஒழிப்பு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எவ்விதத் தொய்வுமின்றித் தொடரும் என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகள் கொண்டு வந்த நபர் கைது!

கொழும்பு, ஏப். 15

வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டுவந்த நபர் ஒருவர், இன்று அதிகாலை, சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம், மாரவில பகுதியைச் சேர்ந்த, 42 வயதான வர்த்தகர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை 12.52 மணியளவில், டுபாயில் இருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சந்தேக நபர் கொண்டுவந்த 4 பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த, சுமார் 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 31 ஆயிரம் சிகரெட்டுகள் அடங்கிய பெட்டிகளை, சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணைகளில் ஈடுபட்ட அதிகாரிகள், சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட அனைத்து சிகரெட்டுகளையும் அரசுடைமையாக்கியதுடன், குறித்த நபருக்கு, ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டனர். (அ)

# இரணைதீவு கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஏப். 15

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நான்கு இந்திய மீனவர்களையும், எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து, ஒரு விசைப் படகுடன் புறப்பட்ட 4 மீனவர்கள், நேற்று முன் தினம் இரவு இரணைதீவு பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள், மன்னார் வடக்கு இரணைதீவுக்கு அண்மித்த கடற்பரப்பினுள், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினர், இந்திய மீனவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், கடற்தொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அதன் பின்னர், கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி.கனிஸ்ரன் மற்றும் கடற்தொழில் திணைக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான து.டிறோசன் செ. சதீஸ்குமார் ஆகியோர், நேற்று பிற்பகல், கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்ரமணியத் திடம் முன் நிலைப்படுத்தினர்.

இதன்போது, 4 இந்திய மீனவர்களையும், எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (அ)

# 40 ஆண்டுகளில் முதியோர் எண்ணிக்கை இலங்கையில் மூன்று மடங்கு அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 15

இலங்கையில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களைக் கொண்ட முதியோர் சனத்தொகை கடந்த சில தசாப்தங்களாகத் தொடர்ச்சியான மற்றும் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு அறிக்கையின்படி, இலங்கையின் முதியோர் சனத்தொகை மற்றும் சனத்தொகை வயோதிபமடைதல் தொடர்பான விரிவான தரவுகள் பல முக்கிய சமூகப் பொருளாதாரப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன.

1946 மற்றும் 1953 ஆம் ஆண்டுகளில் முதியோர் சனத்தொகை விகிதம் 5.5 சதவீதமாக சமநிலையில் காணப்பட்டது. இருப்பினும், 1963 ஆம் ஆண்டிலிருந்து இந்த விகிதத்தில் படிப்படியான உயர்வு அவதானிக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டில் 6.6 சதவீதமாக இருந்த முதியோர் சனத்தொகை, 2024 ஆம் ஆண்டில் 18 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் 1981 முதல் 2024 வரையான காலப்பகுதியில் இலங்கையின் முதியோர் சனத்தொகை விகிதம் ஏறத்தாழ மூன்று மடங்காக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் 12.4 சதவீதமாக இருந்த இந்த விகிதம், மிகக் குறுகிய காலப்பகுதியில் 18 சதவீதத்தை எட்டியுள்ளது சனத்தொகை வயோதிபமடைதலின் வேகத்தைக் காட்டுகிறது.

15 வயதுக்கு குறைந்த 100 சிறுவர்களுக்கு இணையாகக் காணப்படும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் "வயோதிபச் சுட்டெண்" இலங்கையில் பாரிய மாற்றத்தைச் சந்தித்துள்ளது.

1946 முதல் 1981 வரையான காலப்பகுதியில் இந்த சுட்டெண் 20 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் 2001 ஆம் ஆண்டிலிருந்து இதில் மிக வேகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது. 1981 இல் 18.8 ஆக இருந்த இந்தச் சுட்டெண், 2001 இல் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக அதிகரித்ததுடன், 2024 ஆம் ஆண்டில் 87.0 என்ற உச்ச நிலையை அடைந்துள்ளது.

அதாவது, இலங்கையில் தற்போது ஒவ்வொரு 100 சிறுவர்களுக்கும் 87 முதியவர்கள் உள்ளனர். இது சிறுவர் சனத்தொகையும் முதியோர் சனத்தொகையும் சம நிலையை நெருங்கி வருவதைக் காட்டுகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media